திருக்கிறீர்கள். நான் கொடுத்திருப்பது மிகவும் முக்கியமான கவன ஈர்ப்புத் தீர்மானம். மேட்டூர் அணையைத் திறந்து கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆகப் போகிறது. விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்குக்கூட இதுவரை கடன் கொடுக்கப்படாத நிலை இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக கடன் வழங்குவது பற்றி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் இன்னும் அவைக்கு ஏன் வரவில்லை என்று மட்டும்தான் கேட்கலாம். அதன் பொருளுக்குள்ளே போய் பேசக் கூடாது. தினந்தோறும் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர்களுடைய கேள்விக்குரிய பதில்கள் எல்லாம் விரைவிலே கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, அனுமதி அளிக்கப்பட்டு 15 நாட்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 42 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்புதான் 15 நாட்களுக்குள்ளாக விடை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் இலாக்காக்களுக்குப் போயிருக்கின்றன. விரைவில் பதில் வந்ததும் அவையில் எடுத்துக் கொள்ளப்படும். மேலும் நீங்கள் எல்லாம் ஒரு காலத்திலே ஆளும் கட்சியினராக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லா விவரங்களும் தெரிந்திருக்கும்.

(ஆ) மின்சாரத்துறை அமைச்சரின் அறிவிப்பு செயல்முறைக்கு வருதல்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மின்சார வெட்டு குறைக்கப்பட்டிருப்பதாகவும், பகல் நேரங்களில் மின்சாரம் கொடுக்கப்படுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். பகல் நேரங்களிலே மின்சாரம் கொடுப்பதில்லை என்று தந்தியும் தபால்களும் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் உத்தரவு எல்லா இடங்களுக்கும் சென்று விட்டதா? பகல் நேரத்தில் 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிலை 7-ம் தேதி தான் நடைமுறைக்கு வரும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே தாங்கள் அமைச்சரவர்களின் அறிக்கையினைச் சரியாகப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு, 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ம் ஆண்டு வருவாய் வாரிய நீக்க சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.